# பொதுத் துறை

# மானியக் கோரிக்கை எண்.38

## 2016 – 2017

## அறிவிப்புகள்

## செல்வி ஜெ ஜெயலலிதா
## முதலமைச்சர்

தமிழ்நாடு அரசு
2016

# பொதுத் துறை அறிவிப்புகள்

## 1. இரண்டாம் உலகப் போரில் பணிபுரிந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் கைம்பெண்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர நிதியுதவி உயர்த்தி வழங்குதல்

இரண்டாம் உலகப் போரில் பணியாற்றிய தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர நிதியுதவி ரூ.4,500/–லிருந்து ரூ.6,000/–ஆகவும் மற்றும் அவர்தம் கைம்பெண்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர நிதியுதவி ரூ.2,500/–லிருந்து ரூ.3,000/– ஆகவும் உயர்த்தப்படும். இதன்மூலம் 4,870 பேர் பயனடைவார்கள்.

இதற்கு கூடுதல் செலவினம் ஆண்டிற்கு ரூ.3.42 கோடி ஆகும். இச்செலவினம் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து செலவிடப்படும்.

## 2. மறுவேலைவாய்ப்பு அடிப்படையில் குடிமைப் பணியில் வேலைவாய்ப்பு பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்களின் குடும்பங்களுக்கு இரட்டை குடும்ப ஒய்வூதியம் வழங்குதல்

இராணுவத்தில் பணியாற்றி ஒய்வூதியத்துடன் படைப்பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர், மறுவேலைவாய்ப்பு அடிப்படையில் குடிமைப் பணியில் வேலைவாய்ப்பு பெற்று, குடிமைப் பணிக்கான ஒய்வூதியமும் பெற்று உயிர்நீத்த தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்களின் கைம்பெண்கள் மற்றும் வாரிசுதாரர்களுக்கு இராணுவ குடும்ப ஒய்வூதியத்துடன் குடிமைப் பணியில் பணியாற்றிமைக்கான குடும்ப ஒய்வூதியமும் வழங்கப்படும்.

1.4.2003–க்கு முன்பு, குடிமைப் பணியில் மறுவேலைவாய்ப்பு பெற்று, பணிபுரிந்து ஒய்வுபெற்ற பின்பு ஒய்வூதியம் பெற்றுள்ள முன்னாள் படைவீரர்களின் குடும்பங்களுக்கு இது பொருந்தும்.

இதன் மூலம் மாநில அரசிற்கு ஆண்டு செலவினம் ரூ.55.75 இலட்சம் ஆகும்.

## 3. போர் மற்றும் போரையொத்த நடவடிக்கைகள் மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் உயிர்நீத்த மற்றும் காயமுற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த முப்படை வீரர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் கருணைத்தொகையை உயர்த்தி வழங்குதல்

போர் மற்றும் போரையொத்த நடவடிக்கைகள் மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் உயிர்நீத்த மற்றும் காயமுற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த முப்படை வீரர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் கருணைத்தொகை பின்வருமாறு உயர்த்தி வழங்கப்படும்.

- உயிர்நீத்தவரின் வாரிசுதாரர்களுக்கான கருணைத்தொகை ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சமாகவும்,
- மிகக் கடுமையான காயத்தினால் இரண்டு கை / கால் / கண் இழந்தவர்களுக்கான கருணைத்தொகை ரூ.7 இலட்சத்திலிருந்து ரூ.15 இலட்சமாகவும்,

- கடுமையான காயத்தினால் ஒரு கை / கால் / கண் இழந்தவர்களுக்கான கருணைத்தொகை ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.10 இலட்சமாகவும் உயர்த்தப்படும்.

இச்செலவினம் கார்கில் போராட்ட வீரர்கள் நிவாரண நிதியிலிருந்து செலவிடப்படும்.

## 4. எல்லைப் பாதுகாப்பு மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் உயிர்நீத்த மற்றும் காயமுற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த துணை இராணுவ (BSF, CRPF, CISF, ITBP, SSB) படைவீரர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் கருணைத்தொகையை உயர்த்தி வழங்குதல்

எல்லைப் பாதுகாப்பு மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் உயிர்நீத்த மற்றும் காயமுற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த துணை இராணுவ (BSF, CRPF, CISF, ITBP, SSB) படைவீரர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் கருணைத்தொகை பின்வருமாறு உயர்த்தி வழங்கப்படும்.

- உயிர்நீத்தவரின் வாரிசுதாரர்களுக்கான கருணைத்தொகை ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சமாகவும்,

- மிகக் கடுமையான காயத்தினால் இரண்டு கை / கால் / கண் இழந்தவர்களுக்கான கருணைத்தொகை ரூ.7 இலட்சத்திலிருந்து ரூ.15 இலட்சமாகவும்,

- கடுமையான காயத்தினால் ஒரு கை / கால் /கண் இழந்தவர்களுக்கான கருணைத்தொகை ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.10 இலட்சமாகவும் உயர்த்தப்படும்.

இச்செலவினம் அரசு நிதியிலிருந்து செலவிடப்படும்.

## 5. போர் மற்றும் போரையொத்த நடவடிக்கைகளில் உயிர்நீத்த தமிழ்நாட்டைச் சேர்ந்த படைவீரர்களின் கைம்பெண்கள்/வாரிசுதாரர்கள் மற்றும் உடல் ஊனமுற்ற முன்னாள் படைவீரர்களுக்கு கருணைத்தொகையை உயர்த்தி வழங்குதல்

போர் மற்றும் போரையொத்த நடவடிக்கைகளில் உயிர்நீத்த தமிழ்நாட்டைச் சேர்ந்த படைவீரர்களின் கைம்பெண்கள் மற்றும் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் கருணைத்தொகை ரூ.50,000/–லிருந்து ரூ.1 இலட்சமாக உயர்த்தப்படும்.

போர் மற்றும் போரையொத்த நடவடிக்கைகளில் உடல் ஊனமுற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்களுக்கான கருணைத்தொகை ரூ.30,000/–லிருந்து ரூ.50,000/– ஆகவும் உயர்த்தப்படும்.

இச்செலவினம் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் தொகுப்பு நிதியிலிருந்து செலவிடப்படும்.

## 6. போர் விதவைகளின் மகள்கள் மற்றும் போர் நடவடிக்கைகளில் உடல் ஊனமுற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த படைவீரர்களின் மகள்களுக்கு திருமண மானியத்தை உயர்த்துதல் மற்றும் திருமாங்கல்யத்திற்கு 8 கிராம் தங்க நாணயம் வழங்குதல்

போர் விதவைகளின் மகள்கள் மற்றும் போர் நடவடிக்கைகளில் 50 சதவிகிதம் மற்றும் அதற்குமேல் உடல் ஊனமுற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த படைவீரர்களின் மகள்களுக்கு வழங்கப்படும் திருமண மானியம் ரூ.50,000/–த்திலிருந்து ரூ.1 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும். மேலும் திருமாங்கல்யத்திற்கு 8 கிராம் தங்க நாணயம் வழங்கப்படும்.

போர் மற்றும் போரையொத்த நடவடிக்கைகளில் 50 சதவிகிதத்திற்கும் குறைவாக உடல் ஊனமுற்ற படைவீரர்களின் மகள்களுக்கு வழங்கப்படும் திருமண மானியம் ரூ.25,000/–த்திலிருந்து ரூ.50,000/–ஆக உயர்த்தி வழங்கப்படும். மேலும் திருமாங்கல்யத்திற்கு 8 கிராம் தங்க நாணயம் வழங்கப்படும்.

இதற்கு கூடுதல் செலவினம் ஆண்டிற்கு ரூ.6.80 இலட்சம் ஆகும். இச்செலவினம் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் தொகுப்பு நிதியிலிருந்து செலவிடப்படும்.

**7. 10 மற்றும் 12–ம் வகுப்பு அரசு இறுதித் தேர்வுகளில் முதல் 5 இடங்களைப் பிடிக்கும், தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தில் பணியாற்றும் பணியாளர்களின் குழந்தைகளுக்கு, வழங்கப்பட்டு வரும் பரிசுத் தொகையை உயர்த்தி வழங்குதல்**

முன்னாள் படைவீரர்களின் நலன் மற்றும் சேவையை பாராட்டும் வகையில் அவர்களின் குழந்தைகளை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் 10 மற்றும் 12–ம் வகுப்பு அரசு இறுதித் தேர்வுகளில், மாநில அளவில், மாநில பாடத்திட்டத்தில் மற்றும் சிபிஎஸ்இ பாடத்திட்டத்தில் முறையே முதல் 5 இடங்களைப் பிடிக்கும் தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் பணியாளர்களின் குழந்தைகளுக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் பரிசுத் தொகை கீழ்க்கண்டவாறு உயர்த்தி வழங்கப்படும்.

**10–ஆம் வகுப்பில்**

- முதலாம் இடத்தைப் பிடித்தவருக்கு ரூ.7,500/– லிருந்து ரூ.25,000/– ஆகவும்,
- இரண்டாம் இடத்தைப் பிடித்தவருக்கு ரூ.6,000/– லிருந்து ரூ.20,000/– ஆகவும்,
- மூன்றாம் இடத்தைப் பிடித்தவருக்கு ரூ.4,500/– லிருந்து ரூ.15,000/– ஆகவும்,

- நான்காம் இடத்தைப் பிடித்தவருக்கு ரூ.3,000/– லிருந்து ரூ.10,000/– ஆகவும்,
- ஐந்தாம் இடத்தைப் பிடித்தவருக்கு ரூ.1,500/– லிருந்து ரூ.5,000/– ஆகவும் உயர்த்தி வழங்கப்படும்.

**அது போலவே, 12–ஆம் வகுப்பில்**

- முதலாம் இடத்தைப் பிடித்தவருக்கு ரூ.15,000/– லிருந்து ரூ.50,000/– ஆகவும்,
- இரண்டாம் இடத்தைப் பிடித்தவருக்கு ரூ.13,500/– லிருந்து ரூ.30,000/– ஆகவும்,
- மூன்றாம் இடத்தைப் பிடித்தவருக்கு ரூ.12,000/– லிருந்து ரூ.20,000/– ஆகவும்,
- நான்காம் இடத்தைப் பிடித்தவருக்கு ரூ.10,500/– லிருந்து ரூ.15,000/– ஆகவும்,
- ஐந்தாம் இடத்தைப் பிடித்தவருக்கு ரூ.9,000/– லிருந்து ரூ.10,000/– ஆகவும் உயர்த்தி வழங்கப்படும்.

இச்செலவினம் தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் (டெக்ஸ்கோ) நிதியிலிருந்து செலவிடப்படும்.

* * * * *